வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,
ந.க.எண். 3516/ஆ4/2024 நாள் : 26.11.2024

பொருள் : வேலூர் மாவட்டம்– தேர்வுகள்– மார்ச்–2025 மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்வு மையப்பட்டியலில் உள்ள அனைத்து தேர்வு மையங்களும், அதன் இணைப்பு பள்ளிகள் விவரங்கள் இடம் பெற்றுள்ளனவா என்பதை சரிபார்த்து அறிக்கை சமர்பித்தல் – தொடர்பாக

பார்வை: அரசு தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.018143/ f(3) /2024 நாள் . 26.11.2024

--------

பார்வையில் காணும் கடிதத்தின் படி மார்ச் 2025, மேல்நிலை முதலாமாண்டு (+1) பொதுத்தேர்விற்கான தேர்வு மையங்கள் மற்றும் இணைப்பு பள்ளிகளின் பட்டியல் பெறப்பட்டுள்ளது. பெறப்பட்டுள்ள மார்ச் 2025, மேல்நிலை முதலாமாண்டு தேர்வு மைய பட்டியலினை பதிவிறக்கம் செய்து (PRINT OUT) எடுத்து தங்கள் தேர்வு மையத்துடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பு பள்ளிகள் விவரங்கள் சரியாக உள்ளதா என்பதை உறுதி செய்து, சம்பந்தப்பட்ட தேர்வு மைய தலைமை ஆசிரியர் அப்பள்ளிகளுடன் இணைப்புப் பள்ளியாக செயல்படும் தலைமை ஆசிரியர்களிடமிருந்து மேல்நிலை முதலாமாண்டு மாணவ/மாணவிகளின் எண்ணிக்கையினை பெற்று அதன் அடிப்படையில் இணைப்பில் காணும் சான்றிதழினை தேர்வு மைய தலைமை ஆசிரியரின் கையொப்பத்துடன் 28.11.2024 காலை 11.00 மணிக்குள் வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலக ஆ4 பிரிவு எழுத்தரிடம் நேரில் ஒப்படைக்க தேர்வு மைய தலைமை ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் 28.11.2024 தேதிக்குப் பிறகு பெறப்படும் எந்தவொரு திருத்தமும் (பள்ளியின் பெயர் மற்றும் இணைப்பு பள்ளி மாற்றம்) ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்பதனையும் தேர்வு மைய பட்டியலில் திருத்தங்கள் ஏதேனும் பின்னர் கண்டறியப்படின் அதற்கு சார்ந்த தேர்வு மைய தலைமை ஆசிரியர்களே முழு பெறுப்பேற்க நேரிடும் என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு : சான்றிதழ்

//ஓம்.//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
அனைத்து மேல்நிலைப்பள்ளி தேர்வு மைய தலைமைஆசிரியர்கள் / மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் வேலூர் மாவட்டம்.

நகல்

- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர்(இடைநிலை /தனியார் பள்ளிகள்) தொடர் நடவடிக்கையின் பொருட்டு அனுப்பி வைக்கப்படுகிறது.

# <u>சான்றிதழ்</u>

தேர்வு மைய எண்: _________

தேர்வு மையத்தின் பெயர் : _______________________

தேர்வுமையத்தில் தேர்வு நடத்துவதற்கு போதுமான தேர்வறைகள், போதுமான தளவாடங்கள் மற்றும் இருக்கை வசதிகள் உள்ளன என சான்றளிக்கிறேன்.

தேர்வு மைய தலைமையாசிரியர்
/முதல்வர்
(பள்ளி முத்திரையுடன் )

(குறிப்பு : பள்ளிகளிலிருந்து பெறப்பட்ட மாணவ /மாணவிகளின் விவரம் தவறாமல் DCS பக்கத்தில் குறிப்பிட்டு சமர்பிக்க வேண்டும்.)